1973 பிப்ரவரி 13] [திரு. க. அன்பழகன்]

முயற்சி இந்தத் துறையிலே நடைபெற்றது. அந்த முறையிலே சென்னையிலே இருக்கிற தலைமை பொது மருத்துவ மனையை ஒட்டிய கல்லூரியில் பார்மசி வகுப்பு நடத்தப்படுவது, அந்தக் கல்லூரியினுடைய வளர்ச்சிக்கு அதை பி.ஜி. இன்ஸ்ட்டியூட்டாக உயர்த்துவதற்கு ஏற்றதாக இல்லையென்ற காரணத்தால் அந்த வகுப்பை வருகிற ஆண்டிலிருந்து நிறுத்தலாம் என்று ஆலோசித்த பொழுது, அதே மாணவர்கள்—டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரியும் —அந்த வகுப்பை நீங்கள் நிறுத்தக் கூடாது, நிறுத்தினால் நாங்கள் ஸ்டிரைக் செய்யவேண்டி இருக்கும், அடுத்த ஆண்டும் மாணவர்களைச் சேர்க்கவேண்டும். இட வசதி இல்லையென்று சொன்னால், கீழ்ப்பாக்கத்திலே உள்ள மருத்துவக் கல்லூரியில் வைத்துக்கொள்ளலாம் என்று மாணவர்கள் கேட்டதன் காரணமாக அதற்கு இசைந்தோம். ஒரு பக்கம் மாணவர்கள் வகுப்பை நடத்த வேண்டும் என்கிறார்கள். இன்னொரு பக்கம் அங்கு படித்து வருகிற அனைவருக்கும் வேலை தரவேண்டும் என்கிறார்கள். இல்லையானால் படிப்பதை நாங்கள் நிறுத்துவோம் என்கிறார்கள். அரசாங்கம் படிப்பை நிறுத்தக் கூடாது. படிக்கிற அனைவருக்கும் கட்டாயம் வேலை கொடுக்கவேண்டுமென்று கோருகிறார்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட வேண்டுகோளினை ஒட்டி டாக்டர் ஹாண்டே அவர்களும் தங்கமணி அவர்களும் அதிக அக்கறையோடு விஷயங்களைத் தெரிவித்தார்கள். மேலும் சில பாடத்துறைகளில் Non-medical post-graduate course படித்தவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்றநிலையினால் சிலகாலத்திற்கு அந்தப் படிப்பு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்தான் இங்கேயும் இதைப் படிக்கிறவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு இல்லையென்று வருமோ என்று எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. ஆகவே அதே முறையிலேதான் இதையும் குறைக்கலாம் என்ற ஆலோசனை நடத்தினோம்.

அடுத்து, ஏற்கனவே இந்த மாணவர்கள் தங்களுடைய வேண்டுகோளைத் தெரிவித்தபொழுது அரசாங்கம் விரிவாகப் பரிசீலனை செய்திருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் குறைக்கிற ஆலோசனையையும் எதிர்ப்பது எப்படி நியாயமாகும்?

Pharmacy graduates alone to be appointed in Pharmacy departments of Government. என்ற முறையிலே ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

"The absorption of Pharmacy graduates alone in pharmaceutical industries in public sector like B.C.G. Laboartory, Guindy, Cinchona Department, Naduvattam, and Pasteur Institute, Coonoor

featured in the representation made by B. Pharmacy students in 1969 also and it continues. It was pointed out that graduates in science with chemistry as main, chemical engineering or chemical technology with practical experience in manufacture of drugs and also recognised post-graduates in pharmacy and pharmaceutical chemistry as competent technical staff for manufacture of drugs under Rules 71 and 76 of the Drug and Cosmetic Rules 1945 and that it will not therefore be possible to appoint pharmacy graduates alone and exclude all others mentioned above. It was suggested that pharmacy graduates may be given preference, if necessary, after amending the service rules.

மேற் கூறியவாறு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிண்டி இன்ஸ்டியூட் ஆப் வாட்டர் அனலிசிஸ் பகுதியில் இதுவரையிலே பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி தகுதி உடையவர்கள் எடுக்கப்பட்ட இடத்திலேகூட புதிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

'proposals for amending the Rules to provide for the appointment of Pharmacy Graduates as Laboratory Assistants in the King Institute are received and they will be processed for issue of orders in consultation with the Public Department and Tamil Nadu Public Service Commission'.

என்ற முறையிலே ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரு பணியிலே ஏற்கனவே சொல்லப்பட்ட தகுதியையுடையவர்களுக்குப் பதில் வேறு தகுதியுடையவர்கள் நியமிக்கப்பட வேண்டுமானால் அதை பப்ளிக் இலாகா ஏற்றுக்கொள்ள வேண்டும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அமண்டிங் தி ரூல்ஸ் என்பது போன்ற காரியங்களை அரசு கவனித்தாக வேண்டும். அவர்களுடைய வேண்டுகோள் ஒவ்வொன்றும் பரிசீலிக்கப்படுகிறது. அரசாங்கம் அவற்றைப் பரிசீலிக்கத் தவறவில்லை.

பார்மசி கிராஜுவேட் பயிற்சி எதற்காகப் பெற்றார்கள் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மருந்து நிறுவனங்களிலே அவர்களை நியமிக்கவேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. நாட்டில் மருந்துகளைத் தரமுள்ளவையாக உற்பத்தி செய்வதற்காகவும், மேலும் அந்தத் துறையில் பல வளர்ச்சிகளைக் காணுவதற்காகவும், பல ஆராய்ச்சிகளை நிகழ்த்துவதற்காகவும் அவர்கள் இடம் பெற்றாகவேண்டும் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.